08.08.2024
அசல் வழக்கு எண்: 555/2013

வா.சா.1 சாட்சி குருநாதன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா 2 வது இலக்க சொத்தான சர்வே எண்.140/5D சொத்தை எனது சித்தப்பாவான அழகுமலை என்பவர் அவரது மனைவிக்கு தான செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.140/5 ல் 4 ல் 1 பாகத்தை எனது சித்தப்பா அவரது மனைவிக்கு தானம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.17 ஆவணம் எனது சித்தப்பா அழகுமலை அவரது மனைவிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்டு ஆவணம் என்றால் எனக்கு கண் சிறிய எழுத்துக்கள் சரியாக தெரியாது. அதனால் என்னால் படித்து பார்க்க முடியவில்லை.

சர்வே எண்.140/3B2 ல் எனது சித்தப்பா அழகுமலை 2ம் பிரதிவாதி வள்ளி என்ற சௌந்தரவள்ளிக்கு தான செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் செல்லாது என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அழகுமலை என்பவர் மேற்படி 3 தான செட்டில்மெண்டு ஆவணங்களையும் கூட்டுப்பட்டாவின் அடிப்படையில் தானம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் 3வது இலக்க சொத்து மட்டும்தான் கூட்டுப்பட்டாவில் உள்ளது. மற்ற 2 சொத்துக்கள் கூட்டுப்பட்டாவில் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் அவர்களுக்கு எழுதிகொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்டு ஆவணங்களின் அடிப்படையில் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதன் காரணமாகத்தான்

வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3ம் பிரதிவாதிதான் தாவா சொத்தை தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதிக்கு யார் கிரையம் கொடுத்தது என்றால் 2ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தார். 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு நான் எனது சகோதரி பெயரில் மோசடியாக ஒரு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது சகோதரிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.140/5B சொத்திற்கு எனது அம்மா பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு தனித்தனியாக ஏற்பட்ட பட்டாதான் வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 என்றால் சரிதான்.

வா.சா.ஆ.8 ஆவணம் எனது அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது அம்மா பெயருக்கு ஏற்பட்ட பட்டாதான் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணமான பட்டாவானது எனது அப்பா பெயரில் தனித்து உள்ளது என்றால் சரியல்ல. எனது தாயார் பெயரிலும், சித்தப்பாக்கள் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது. எனது சித்தப்பா அழகுமலைக்கு கிடைத்து தனிப்பட்டாவாக ஏற்பட்டு அனுபவம் செய்து வந்த சொத்தை மகாலிங்கம் என்பவருக்கு வா.சா.ஆ.12 மூலமாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மகாலிங்கம் கிரையம் பெற்ற சொத்தை வா.சா.ஆ.13 ஆவணம் மூலமாக பால்பாண்டிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் மகாலிங்கம் கிரையம் பெற்ற 15 சென்டையும் பாகமாக கிடைத்த 15 சென்டையும் சேர்த்து 30 சென்டை பால்பாண்டிக்கு கிரையம் கொடுத்துள்ளார்.

வா.சா.ஆ.15 ஆவணம் எந்த தேதியில் யார் பெயரில் செலுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு தனித்தனியாக பட்டா ஏற்பட்டு அதன் அடிப்படையில் செட்டில்மெண்டு ஆவணம் ஏற்படுத்தி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதனால் மேற்படி கிரையம் செல்லும் என்றாலும் தாவா சொத்துக்கள் 3ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல.